REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 8உ வியாழன் (21—4—55) ★ ★ வெளியூர்: சித்திரை 9உ வெள்ளி (22—4—55) [இதழ் 265

உடல் பருமனான பெண்கள் அமெரிக்காவில் மிகக்குறைவாம்!

அமெரிக்காவில் பெண்களில் உடல் பருமனாக இருப்போர் மிகக் குறைவான அளவே உள்ளனர் என்று ஜெனரல் பிராங்கோவின் மகள் அண்மையில் அங்கு சென்று திரும்பியபிறகு கூறியதாக மாட்ரிட் நகரிலிருந்துவரும் 'குசெடியோ' எனும் இதழில் குறிப்பிட்டப்படிருக்கிறது.

"பொதுவாகவே அமெரிக்கப் பெண்கள் அழகாயிருக்கின்றனர் எனக்கு ஆச்சரியத்தை அளித்ததெல்லாம், அங்கு நான் மிகப் பருமனான பெண்கள் எவரையும் பார்க்கவில்லை. அவர்கள் எல்லாம் களினமாகவும், அழகான தோற்றமுடையவர்களாயுமிருக்கின்றனர்" என்று அந்தப் பெண்மணி கூறினாராம்.

ஊழல் மலிகிறது! பண நஷ்டம் கூடுகிறது!

செயல்முறை தவறால் ஆலைகள் ரூபாய் 37 இலட்சத்தை விழுங்கின!

கைத்தறிகளுக்கு உதவும் பெயரால் ரூபாய் $1\frac{1}{4}$ கோடி கொள்ளை போயிற்று!

காலதாமதத்தால் ரூபாய் 29,000 தண்டமாயிற்று!

இந்தியப் பேரரசின் நிர்வாக ஊழலால் பாழான பணம்

"1947—48, 1948—49 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் இந்தியப் பேரரசு, ஜப்பானிலிருந்து செயற்கைப் பட்டு நூல் இறக்குமதி செய்தது. அந்தக் காலத்தில், இந்தியாவில் பவுண்டு ஒன்றுக்கு ரூ. 6—8—0 வீதம் செயற்கை பட்டு நூல் தனி நபர்களால் விற்கப்பட்டு வந்தது; ஆனுல், அரசாங்கமோ, தான் முதல் முறையாக இறக்குமதி செய்த 22 லட்சம் பவுண்டு பட்டு நூலை, பவுண்டு ஒன்றுக்கு ரூ. 5—1—6 வீதம் விற்பனை செய்தது; இதனுல், செயற்கைப் பட்டு நெசவாலைகளும், கைத்தறி 'மாஸ்டர் வீவர்'களுமே, கொள்ளை இலாபம் அடிக்க முடிந்தது.

"செயற்கைப் பட்டுத் துணிகளுக்கு விலை நிர்ணயமும், கட்டுப்பாடும் இல்லாத காரணத்தால், மேற்குறிப்பிட்ட இரு சாரரின் அதிக இலாபத்தைத் தடுக்க, 'அரசாங்கம் விற்பனை செய்துவரும் செயற்கைப் பட்டு நூலின் விலையை, தனி நபர்கள் விற்கும் விலைக்கு உயர்த்தவேண்டும்,' என நூல் நூற்பு கமிஷனர் பலமுறை இந்தியப் பேரரசை வற்புறுத்தி வந்தார்; ஆனுல், அரசாங்கம், கமிஷனரின் எச்சரிக்கையை அலட்சியப்படுத்திவிட்டது.

"செயற்கைப்பட்டு ஆடையை உபயோகிக்கும் பொது மக்கள் பயனடைவர் என்ற நம்பிக்கையில், அரசாங்கத்தால் விற்கப்படும் பட்டு நூல் விலைக்குச் சரியாக பட்டு ஆடையும் விலையில் குறைத்து விற்கப்பட வேண்டும் என, உற்பத்தியாளர்களை இந்திய அரசாங்கம் கேட்டுகொண்டு இருந்தது; ஆனுல், அந்த வேண்டுகோள், அரசாங்கத்திடமிருந்து நூல் வாங்கிய உற்பத்தியாளர்களால் அலட்சியப்படுத்தப்பட்டுவிட்டது.

"அரசாங்கத்திடமிருந்து குறைந்த விலைக்கு செயற்கைப் பட்டு நூல் வாங்கி, நெசவு செய்த ஆடைகளை அதிக விலைக்கு விற்பதின் மூலம் ரூ. 30,93,750 வரை ஆலை சொந்தக்காரர்கள் அதிக இலாபம் பெற்றுள்ளனர் என்று, டெக்ஸ்டைல் கமிஷனர் அறிவித்துள்ளார்.

"1948—பிப்ரவரி மாதத்தில், தனி நபர்கள் விற்றுவந்த விலைக்கொப்ப, தாம் விற்றுவந்த பட்டு நூலின் விலையையும் கூட்டுவது என இந்திய அரசாங்கம் முடிவுக்கு வந்தது; ஆனுல், அச்சமயத்தில் தென்னக வசமிருந்த பட்டு நூல் குறைந்து காணப்படவே, மேற்குறித்த முடிவை இந்திய அரசாங்கம் செயலாற்றுவதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது."

1952—53ம் ஆண்டில் இந்தியப் பேரரசின் செலவைத் தணிக்கை செய்த குழு, ஏற்கனவே வெளியிட்டுள்ள விவரங்களில் சேராத சில விவரங்களை இப்பொழுது வெளியிட்டுள்ளது. அவ்விவரம் 1954-ம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் சேர்க்கப்பட்டு, மக்கள் சபை உறுப்பினர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. மேலே எடுத்துக் காட்டப்பட்டுள்ளதும், கீழ் தரப்படுவதும் அவ்வறிக்கையில் காணப்படுவதாகும்.

"கைத்தறிகளுக்குத் தேவைப்படும் நடுத்தர ரக நூலை உற்பத்திச் செய்வதற்காக என, அமெரிக்கப் பஞ்சை இறக்குமதி செய்யும் நூற்பு ஆலைகளுக்கு ரூ. 1,33,85,359 உதவி நிதி அளித்தது இந்தியப் பேரரசு.

"கைத்தறிகளுக்கு உதவும் எண்ணத்துடன் அமெரிக்கப் பஞ்சை இறக்குமதி செய்யும் நூற்பு ஆலைகளுக்கு இப்பெரும் தொகை தரப்பட்ட போதிலும், இம்முக்கிய நிபந்தனையை தொடர்புடைய நூற்பு ஆலைகளுக்கு டெக்ஸ்டைல் கமிஷனர் அறிவிக்காது இருந்துவிட்டார். அதனுல், எந்த இனத்திற்காக இத்தொகை தரப்பட்டதோ, அதே இனத்திற்காகத்தான் மேற்படி தொகை செலவிடப்பட்டிருக்கிறது என்பதை, தணிக்கை செய்து முடிவு கட்டுவது முடியாததாக இருக்கிறது."

போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த ஒரு ஆகாயவிமான அதிகாரியின் இன்ஷ்யூர் செய்யும் மனுவை ஒப்புவதில் இந்தியப் பேரரசு காலதாமதம் செய்திருக்கிறது. அந்த அதிகாரியோ, பரீட்சார்த்த விமானப் பயிற்சியில், தற்செயலாக விபத்திற்குள்ளாகி மரணமுற்ருர்; அதனுல், அந்த ஆகாய விமான அதிகாரியின் மனைவிக்கு 1954 பிப்ரவரி 25-ந்தேதி ரூ. 30,000 இந்தியப் பேரரசால் கொடுக்கப்பட வேண்டியதாயிற்று.

"அந்த அதிகாரியின் இன்ஷ்யூர் மனு காலாகாலத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தால் ரூ 900 பங்குத் தொகையாகச் செலுத்தும் அளவே இந்தியப் பேரரசிற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கும்"

இந்தியப் பேரரசின் இந்தி வெறிக்கு சர்க்கார் ஊழியர் எதிர்ப்பு

மத்திய மந்திரியிடம் மனு தந்தனர்

புதுடில்லி, ஏப். 21—

மத்திய சர்க்கார் அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள், பதவி உயர்வு, பதவி உறுதிப்பாடு ஆகியவற்றிற்காக நடைபெறும் இலாகா பரீட்சைகளில் இந்தியையும் கட்டாய பாடமாக அரசாங்கம் வைத்திருப்பதில் தங்களுக்குள்ள கஷ்டங்களை எடுத்துக்காட்டி, மனு ஒன்றை உள்நாட்டு மந்திரி பண்டித பந்திடம் தந்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஊழியர்களில் பெரும்பாலானோர் ஏழாண்டுகளுக்கு மேல் பணி புரிந்தவர்கள் என்றும், அவர்கள் அந்தப் பணிக்கு இலாயக் கற்றவர்கள் என்று கூறுவதற்குத் துளிகூட காரணமில்லை என 'மத்திய பப்ளிக் சர்வீஸ் கமிஷன்' கூறியிருப்பதாயும், அந்த மனுவில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

"பலர் 40 வயதுக்கு மேலாகிவிட்டவர்கள்; அவர்கள் இப்போது வகிக்கும் பதவிகளில் நிரந்தரமாக்கப்படவோ, அல்லது உயர் அதிகாரிகளாகப் பதவி உயர்வு பெறவோ, இந்தி மொழியைக் கட்டாய பாடமாகக் கொண்ட இலாகா பரீட்சை எழுத வேண்டியுள்ளது; குறிப்பாகப் பல ஆண்டுகள் பணி புரிந்துவிட்ட அவர்களில் பெரும்பான்மையினர் சென்னை வாசிகளாயிருப்பதால், இந்தி மொழியையும் ஒரு பாடமாகப் பயின்று பரீட்சை எழுதுவது மிகக் கடினமாயிருக்கும்," என்றும் அந்த மனுவில் காணப்படுகிறது.

இந்தி மொழியில் பரீட்சை எழுதுவதினின்றும் தங்கட்கு விலக்களிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

மந்திரி, மனுவில் காணப்பட்டுள்ளவை பற்றி கருணையுடன் கவனிப்பதாகக் கூறினாராம்.

'ஏட்டுக் கல்வி பெறும் வாய்ப்பற்ற துரதிர்ஷ்டசாலிகளில் நானுமொருவன்'

'என் ஆசானின் அறிவு ஊற்றிலிருந்து சில துளிகளைப் பெறுவதற்கு அது தடையாக இல்லை'

'எனது ஆசான் கூற்று உண்மை அல்ல'

டாக்டர் அம்பேத்கார் குற்றச்சாட்டிற்கு ராஜ்போஜ் பதில்

"உயர்ந்த அல்லது எந்தவித கல்வி அறிவும் பெறும் உரிமை மறுக்கப்பட்ட எத்தனையோ துரதிருஷ்டசாலிகளில் நானும் ஒருவன் என்பது உண்மை; ஆனுல், எங்கள் ஆசிரியர் என்று நாங்கள் கருதிய டாக்டர் அம்பேத்காரின் காலடியில் நின்று, அவரது அறிவு ஊற்றிலிருந்து சில துளி அறிவு பெறும் வாய்ப்பினை அது தடுத்துவிடவில்லை; கடந்த 13 ஆண்டுகளாகவே நான் அம்மாதிரி இருந்துவந்திருக்கிறேன்.

"அந்தக் காலத்திலெல்லாம், சம்மேளனத்தின் பிரதிநிதியாக நான் மாநாடுகளிலும்—ஏன்—நாட்டின் உயர்ந்த மக்கள் சபையிலும் இடம் பெற்றிருப்பதற்கு, 'எனது அறியாமை ஒரு தகுதிக் குறைவு,' என்பது அவருக்குப்படவில்லை.

"பின் ஏன் திடீரென, என்னைப் போன்ற ஒரு சாதாரண 'அறிவிலி'யிடம் அம்பேத்காருக்கு வெறுப்பு ஏற்பட்டது? இந்தப் புதிய போக்கிற்கு—டாக்டர் அம்பேத்கார் மட்டுமே சம்மேளனத்தின் ஏகப் பிரதிநிதியாயிருக்க முடியும்—இதரர் எல்லாம் 'ஆமாம்சாமி'களாகத்தான் இருப்பர்—என்பதுதான பொருளா? டாக்டர் அம்பேத்கார் சம்மேளனத்தை அந்தப் போக்கில்தான் உருவாக்கி வருவதாக நாங்கள் அஞ்சிக்கொண்டிருந்தோம்; எங்கள் அச்சத்தைப் போக்க வேண்டிய அவர் எங்கள் சந்தேகத்தையே நிலைநாட்டிவிட்டார்,"

—என்று, தாழ்த்தப்பட்டோர் சம்மேளன பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலகிய பி. என். ராஜ்போஜ், டாக்டர் அம்பேத்காருக்கு பதில் கூறும் வகையில் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிருர்.

"என்னைப் பொறுத்த வரையில், என்னைப் பதின்மூன்று ஆண்டுகளாகப் பொதுச்செயலாளராக தலைமையும், சம்மேளனமும் ஏற்றுக் கொண்டிருந்தன; என்னிடம், பணியாற்றுவதற்குத் தவிர வேறெந்த தகுதியும் கிடையாது.

"தங்களைக் கற்றறிந்தவர்கள்—புத்திசாலிகள் என்று கருதிக் கொண்டிருப்போர்தான், அலுவலக தஸ்தாவேஜுக்களையும் 'ரிகார்டு'களையும் கண்காணித்து வந்திருக்கவேண்டும்.

'கற்றறிந்த புத்திசாலிகளைத் தவிர வேறு யாரால்தான் வருவித்த பணத்திற்கு கணக்கு வைத்திருக்க முடியும்?"

என்றும் அவரது அறிக்கையில் ராஜ்போஜ் குறிப்பிட்டிருக்கிருர்.

நான் வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் சென்றது எனது சொந்த ஹோதாவில். சம்மேளனத்தின் பிரதிநிதி என்ற முறையில் அல்ல; சுற்றுப்பயணங்களை எல்லாம், மக்கள் சபை விடுமுறையின் போதுதான் மேற்கொண்டேன்; இதனுல், மக்கள் சபையில் நான் சரிவரப் பணி புரியவில்லை என்று

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை 21—4—'55 வியாழன்

பரிதாபப்படுகிறோம்!

"'உலகம் முழுவதும் 'ஒற்றுமையை' நாடி நிற்கையில், இங்கு, வடநாடென்றும், தென்னாடென்றும் பிரித்துப் பேசுவது மடமை;

"தனியாக திராவிட நாடு ஏற்பட வேண்டுமென்ற பேச்சுக்களெல்லாம் வெறும் கானல் நீர்—நடக்காத காரியம்."

இவ்வாறெல்லாம், சென்னை மாகில நிதியமைச்சர் கனம் சுப்பிரமணியம் கோவைப்பொதுக் கூட்டமொன்றில் பேசியதாகச் செய்தி வெளிவந்துள்ளது.

"திராவிட நாடு என் வேண்டும்? இன்றுள்ள அரசியல் அமைப்பான 'ஏக இந்தியா'விலிருந்து, தென்னாடு என் பிரிய வேண்டும்?" என்பதற்கான விளக்கங்களை, எண்ணற்ற ஆதாரங்கள்—வரலாற்று உண்மைகள்—நடைமுறை அரசியல் நிலைகள் ஆகிய காரண காரியங்களுடன், தெளிவாக நாம் எடுத்துக் கூறிவருகிறோம்.

நாம் இதுவரை, நமது விடுதலைக் கோரிக்கைக்காகக் காட்டியுள்ள காரண காரியங்கள், 'இவ்வகையால் தவறுடையவை,' என்று எவரும்—எந்த மாற்றுக் கருத்தினரும் எடுத்துக்காட்டியதில்லை.

நமது லட்சியம்-தனித் திராவிடக் கோரிக்கை-நாட்டு மக்களிடையே, அரசியல் தெளிவு பெற்ற பெரும்பான்மையினரின் ஆதரவினைப் பெற்றிருக்கிறது; மேலும் மேலும் பெற்றுக் கொண்டு வருகிறது என்பது கண்கூடு.

ஒரு காலத்தில் 'இவர்களைப் பற்றிப் பேசுவதே இழுக்கு, பெருமைக் குறைவு,' என்றெண்ணிக்கிடந்த பெரிய மனிதர்களெல்லாம்கூட, இன்று, திராவிட நாடு இலட்சியம் குறித்துப் பேச வேண்டிய நிலைக்கு—ஆவடி மாநாட்டில் "ஐயன்மீர்! ஐக்கியம் குலைகிறது; 'ஒற்றுமை' சீரழிக்கப்படுகிறது; பிரிவினை எண்ணம் வளருகிறது. எனவே, ஒன்றுபடுவீர்,—வளரும் பிரிவினைச் சக்திகளை ஒடுக்க. இந்தியாவின் ஐக்கியத்தைக் காப்போம், ஒற்றுமையை பலப்படுத்துவோம்," என்று நமது பிரிவினை முழக்கம் கேட்டு, கலக்கமுற்று, தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டனர்; அவ்வளவு வளர்ந்தோங்கி நிற்கிறது, மக்களிடையே நம் இலட்சியம்.

'திராவிடம்' அமையக் கூடாது என்பதற்கான காரணங்களைக் காட்டி வாதிடுவதில் நமக்கொன்றும் கவலை இருக்க முடியாது.

ஆனால், 'திராவிடம் வேண்டும் எனக் கோருவது மடமை' என்று பேசுவது, நமக்கு, கவலையை அல்ல—பேசுவோர் மீது அனுதாபத்தைத்தான் வளர்க்கிறது.

உலகம் ஒற்றுமையை நாடி ஓடிக் கொண்டிருக்கிறதாம— கூறியிருக்கிறார் மந்திரி.

ஐந்தேமுக்கால் கோடி சதுர மைல் பரப்புள்ள இந்தப் பரந்த உலகத்தில் வாழும் சுமார் இருநூற்று நாற்பது கோடி மக்களும், ஒரே ஆட்சியின்கீழ் ஒற்றுமையாக வாழ நினைக்கிறார்கள் என்று கனம் மந்திரியார் இதய பூர்வமாகவே—மனச் சாட்சிக்கு விரோதமின்றிக் கூறுகிறாரா?

'உலகத்து மக்கள் எல்லாம் ஒன்றுதான்' என்றெண்ணும் மனப்பான்மை, உலகெங்கணுமுள்ள மக்களிலே, ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்காவது வந்துவிட்டதாக திட்ட வட்டமாகக் கூறுகிற நிலை இருக்கிறதா?

'வெண்டல் வில்கி' கூறியது போல, 'ஒரே உலகம்' என்ற நிலை மலரும்போது வேண்டுமானால் — இப்போது உலகத்தை, பல்வேறு கண்டங்களாக, துணைக்கண்டங்களாக, நாடுகளாக, மாநிலங்களாக, மாவட்டங்களாக, வட்டங்களாகப் பிரித்துவைக்கிற எல்லைக் கோடுகள் எல்லாம் அழிக்கப்படும்போது—நாமும் நமது 'திராவிட நாடு' என்ற இலட்சியத்தை விட்டுவிடலாம்; விட்டு விடுவோம்!

ஆனால் உலகம், ஐந்து கண்டங்களாக, பல உபகண்டங்களுடன், ஏறத்தாழ, பெரும் நாடுகள் பட்டியலில் இடம் பெறுகிற சுமார் 96, 97 நாடுகளாகப் பிரிந்து, தங்களுக்கெனத் தனித்தனி எல்லையும், ஆட்சியும், பாதுகாப்பும்கொண்டு வாழும் வரை, நாமும், திராவிடம்—தென்னாடு, 'ஏக இந்தியா' என்ற அரசியல் அமைப்பிலிருந்து விடுபட்டு தனியாக இயங்கும் போதுதான், திராவிடர்கள் நிரந்தரமான விடுதலையோடு கூடிய நல்வாழ்வு பெற முடியும் என்கிற நிலை இருப்பதால் 'திராவிட நாடு திராவிடருக்கே,' என்ற கோரிக்கையை வலியுறுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம்.

'இந்தியா' என்ற அரசியல் அங்கம், இன்றுள்ள 'இந்தியா,' மற்றும் இன்று பிரிந்து சென்றுவிட்ட ஆப்கனிஸ்தான், பர்மா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகளையும் சேர்த்து, வெள்ளை ஏகாதிபத்தியத்தின் துப்பாக்கி முனையால் உருவாக்கப்பட்டது. அந்த அரசியல் அங்கம், அன்று அவர்கள் உருவாக்கிய நிலையில் இன்று இல்லை. எஞ்சியுள்ள அங்கத்தைத்தான் 'இந்தியா'வென்று கூறிக்கொண்டு அந்த 'இந்தியா' 'ஏக இந்தியா'வாக, என்றென்றைக்கும் இருக்க வேண்டுமென்கிறார்கள்.

வெள்ளை ஏகாதிபத்தியத்தின் துப்பாக்கி முனைக்கிருந்த வலிமை உருவாக்கிய 'அரசியல் தோற்றத்தை'க் காட்டி, அதற்கு 'இந்திய ஒற்றுமை' என்ற பெயர் சூட்டி, அந்த ஒற்றுமையால்தான், இன்று உலகெங்கணும் இந்தியாவிற்கு மதிப்பு உயர்ந்திருக்கிறது என்று வாதிடுகிறார்கள்.

வரலாறு, பண்பாடு, மனப்போக்கு, அறிவுத் திறன், சிந்தனை வழி, கலை, மொழி, வாழ்வு நடைமுறை முதலிய அத்தனையாலும் வேறுபட்ட ஒரு இனம்—ஏழரைக் கோடி திராவிடர்கள், தங்கள் மானம், வாழ்வு இரண்டையும் பறிகொடுத்து, 'ஏக இந்தியா'வின் பெருமையைக் காப்பாற்ற வேண்டுமென்பது என்ன நியாயம்?

'ஏக இந்தியா' என்ற பெயரில், வடநாட்டவருடன் தென்னாட்டவரும் சேர்ந்து வாழ்வதால் இலாபமா? நஷ்டமா?—வாழ்வா? தாழ்வா?

பதில், நாம் தரத்தேவை இல்லை; கடந்த ஏழரை ஆண்டு கால நடைமுறை அனுபவம், மக்களுக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறது—'ஏக இந்தியா' என்றபெயரால் வடநாடு தென்னாட்டை அடிமைக்காடாக்கி, சுரண்டல் வேட்டையாடி வருகிறது; தென்னாட்டு மக்கள் வாழ்விழந்து தவிக்கின்றனர்; வடநாடு வளருகிறது-வாழ்ந்து கொண்டிருக்கிறது; வளமாக வாழ்வதற்கான வழிவகைகள், விழிப்புணர்வுடன் செய்யப்படுகின்றன, வடநாட்டு ஆட்சியாளரால். தெற்கு தேய்ந்து வருகிறது — என்ற உண்மையை!

வடநாட்டவருக்கு, தென்னாட்டவர் என்றுமே அடிமையாயிருந்ததில்லை, கடந்த ஏழரை ஆண்டுகால, 'ஏக இந்திய' காங்கிரஸ் ஆட்சி காலத்தைத் தவிர, என்ற உண்மையை, வரலாறு கூறிக் கொண்டிருக்கிறது.

இப்படி 'ஏக இந்தியா' பெயரில், திராவிடர் அடிமைகளாயிருக்கின்றனர் என்ற அவமானமும், வாழ்விழந்து வாடுகின்றனர் என்ற இழிநிலையும் துடைக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் 'திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்' என்ற நமது இலட்சியம்.

இந்த இலட்சியத்திற்காக, நாம் காட்டுகிற வரலாற்று ஆதாரங்களையும், நடைமுறை காரணங்களையும், கனம் மந்திரி மறுத்து, எதிர்வாதங்களைக் கூறி, 'திராவிட நாடு கேட்பது மடமை' என்று பகர்ந்திருந்தால், நாம் மகிழ்ந்திருப்போம்!

எதைத் 'தவறு' என்று அவர் கூறுகிறாரோ, அது, 'என் தவறு' என்பதையும் அவர்விளக்கியிருக்கவேண்டும். ஆனால், விளக்கவில்லை. விளக்க மாட்டார்—காரணம், அவரால் விளக்கிக் கூறமுடியாது என்பதல்ல; கூறுவதற்கு விளக்கங்களில்லை என்பதுதான்!

உலகம் ஒன்றுபடும்போது நாமும் ஒன்றுபடுவோம். உலகத்து மக்கள், தங்கள் தங்கள் வாழ்வுக்கும், மானத்திற்கும் பாதுகாப்புத் தேடிக் கொள்ள எல்லைக் கோடுகள் வைத்திருக்கும் வரை, திராவிடரும் தாங்கள் வாழ்ந்திருந்த நாட்டின் எல்லைக்கோடு அழிக்கப்பட்டு, இன்னொரு நாட்டிற்கு தாங்கள் அடிமைப்பட்டு வாழ்விழந்து தவிப்பது நியாயமானதல்ல என்பதால் தமக்கு எல்லைக் கோடு வேண்டுமெனக் கேட்கின்றனர் — 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று முழங்குகின்றனர்.

அந்த முழக்கம், கனம் சுப்பிரமணியம் கூறுகிற 'உலகம் ஒன்றாக வேண்டும்' என்ற கூற்றிற்கு முரண்பட்டதுகூட அல்ல.

எப்படி, 29 நாடுகள் — ஆசிய, ஆப்பிரிக்கக் கண்டங்களில் இருப்பவை — தனித் தனியாக ஆட்சி அமைப்பு, எல்லைப் பாதுகாப்பு இவற்றை வைத்துக்கொண்டே ஆசியாவும், ஆப்பிரிக்காவும் ஒன்றுபட வேண்டும் என்கின்றனவோ, அப்படித்தான் நாமும், திராவிடர்களின் வாழ்விற்கும் மானத்திற்கும் பாதுகாப்பு செய்துகொள்ள வேண்டும், உலகமும் ஒன்றுபட வேண்டும் என்கிறோம். இப்படிக் கூறுவது முரண்பாடுடையது என்றால், 'ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் ஒன்றுபட வேண்டும் — தனித்தனி ஆட்சிகள் இருந்த போதும்கூட,' என்பதும் முரண்பாடு உடையதாகும். இதைக் கூற கனம் மந்திரிக்கு நெஞ்சுரமிருக்க முடியாது.

எனவே, நமது இலட்சியம், 'திராவிட நாடு திராவிடருக்கே,' என்பது மடமை என்று வர்ணித்த மந்திரியின் பேச்சு கண்டு அவர்மீது நாம் பரிதாபப்படுகிறோம்!

இலட்சியம் கானல் நீர்தான் என்பதை காலம் வெகு விரைவில் கனம் மந்திரியாருக்கு உணர்த்தவிருக்கிறது என்று, மனம் புண்ணாகியுள்ள திராவிட மக்கள் கூறுகின்றனர்.

ஆசிய - ஆப்பிரிக்க மாநாடு - எதிர்காலத்தைக் குழப்புமாம்!

தென்னாப்பிரிக்கப் பிரதமருக்குக் காய்ச்சல்!

"பாண்டுங்கில் நடைபெறும் ஆசிய - ஆப்பிரிக்க நாடுகளின் மாநாடு, எதிர்காலத்தில் அமைதியற்ற ஒருசூழ்நிலையைஉருவாக்குவதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியாது,"

என்று, தென்னாப்பிரிக்கப் பிரதமர் ஸ்ட்ரீடம் குறிப்பிட்டிருக்கிறார்.

"ஆசியாவிலிருந்தும, ஆப்பிரிக்காவிலிருந்தும் ஐரோப்பியர் வெளியேற்றிவிடுவதற்குத்தான் மாநாட்டில் இந்தியா, சீனா ஆசிய நாடுகளின் பிரதமர்கள் முயற்சித்து வருகின்றனர்," என்றும் அவர் குற்றஞ்சாட்டியிருக்கிறாராம்.

இராமபாதசாகர் அணைத் திட்டம்

ரூ. 100 கோடி செலவாகுமென மதிப்பு

கர்னூல், ஏப். 19—

வெள்ளத் தடுப்புத் திட்டங்களில் இராமபாதசாகர் திட்டத்தையும் சேர்த்து, ஆந்திர சர்க்கார், இந்திய சர்க்காருக்கு அனுப்பி உள்ளனராம்.

இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் 'சபரி திட்டம்' கைவிடப்பட வேண்டியிருக்கும் என்றும், ஏனெனில், 'சபரி திட்ட'ப் பிரதேசம், இராமபாதசாகர் அணையில் அடங்கிவிடும் என்றும் தெரியவருகிறது.

இந்தத் திட்டத்திற்கு, முன்பு ரூ 30 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டிருந்ததாயும், ஆனால் இப்போது 46 கோடி மட்டுமே செலவாகுமென மதிப்பிடப்படுவதாயும் கூறப்படுகிறது.

இந்த அணையை ஒட்டி வெட்டப்பட வேண்டிய கால்வாய்கள் முதலியவற்றிற்காக ரூ 50 கோடி செலவாகலாமெனவும், மொத்தத்தில் ரூ. 100 கோடிக்கு உள்ளாகவே இந்தத் திட்டம் முடியக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

திட்டம் பற்றிய பரிசீலனை, வரும் ஜூன் திங்களில் முடிவுற்றாலும்கூட திட்டம் வேலை துவங்குவதற்கு இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

துப்பாக்கிக் குண்டுகளுக்கு மூவர் பலி!

டியோரியா, (உ பி) ஏப். 19—

உத்திர பிரதேசத்தில், டியோரியா பகுதி கிராமம் ஒன்றில் ஏற்பட்ட கலகத்தை அடக்க போலீசார் செய்த துப்பாக்கிப் பிரயோகத்தினால் மூன்று பேர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது. பலருக்குப் படுகாயமும் ஏற்பட்டதாம்.

சர்க்காரைக் கவிழ்க்கும் சர்க்கார் ஊழியர்கள்?

நாகபுரி ஏப். 19—

"எந்த ஒரு சர்க்கார் ஊழியராவது சர்க்காரைக் கவிழ்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டாலாவது, அல்லது ஈடுபட்டிருப்பதாக சந்தேகிக்கப்பட்டாலாவது, அவர்களைக் கட்டாயமாக வேலையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்ளுமாறு சர்க்கார் உத்தரவிடும்,"

என்று, புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மத்திய பிரதேச மாநில சர்க்கார் உத்தியோக விதிகள் கூறுகின்றன.

வரி வஜா!

சென்னை, ஏப். 19—

நெல்லை மாவட்டத்தில், நாங்குநேரி தாலுகா, திசையன்விளை, ராதாபுரம் ஆகிய பிரிவுகளில் புன்செய் நிலங்களுக்கு கிஸ்திவஜா அளித்துள்ளதாக சென்னை சர்க்கார் அறிவித்திருக்கிறது.

இதன்படி, மழையில்லாமையால் தரிசாக விடப்பட்ட புன்செய் நிலங்களுக்கும், நாலணாவிற்கும், அதற்குக் குறைவாகவும் மகசூல் உள்ள புன்செய் நிலங்களுக்கும் 1,364 பசலிக்கு முழு கிஸ்தியும் வஜா செய்யப்படுமாம்.

நகரசபைத் தேர்தல்

கமிஷனருக்கு சர்க்கார் உத்தரவு

சென்னை நகரசபைக்கான தேர்தல் வரும் ஆகஸ்டு—செப்டம்பர் மாதத்தில் நடைபெற வேண்டும் என்றும், ஒத்திவைக்கப்படக் கூடாது என்றும், இப்போதுள்ள வாக்காளர் பட்டியலின்படியே தேர்தல் நடைபெறுமெனவும், தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு சர்க்கார், நகரசபை கமிஷனருக்கு உத்தரவிட்டுள்ளதாயும் தெரியவருகிறது.

நகரத்தின் பலபிரிவுகளும் புதுப்பிக்கப்பட வேண்டும் என்று கோரி அதற்காகத் தேர்தலை ஒத்திப்போடுமாறு சென்னை நகரசபை கோரியதாகவும், இதை சர்க்கார் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டதாயும் தெரியவருகிறது.

ஐக்கிய கர்நாடகம்: மைசூர் சர்க்கார் ஆதரவு

ஐக்கிய கர்நாடக மாநிலம் அமைப்பதை மைசூர் மாநில சர்க்கார் ஆதரிப்பதாக, கர்நாடகக் காங்கிரஸ் குழுத் தலைவர் அறிவித்திருக்கிறார்.

மைசூர் சர்க்கார் அமைத்துள்ள குழு ஒன்றும், ஐக்கிய கர்நாடக மாநிலம் அமைப்பது சாத்தியமானதே என்று கருதுகிறதாம்.

'ஆதிக்கக் கரம்' மேலும் வலுப் பெறுகிறது?

புதுடில்லி, ஏப். 19—

இந்தியாவின் மூன்று திட்டங்களுக்கு, அமெரிக்கா, 7,20,000 டாலர் உதவி அளிப்பதென்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டு விட்டனவாம். இத்திட்டங்களுக்கான செலவில், ரூ. 4,12,61,200 இந்திய சர்க்காரின் பங்கு என்று தெரிகிறது.

வெளிநாடுகளுக்கு உதவளிப்பதற்காக அமெரிக்கா ஒதுக்கியுள்ள 350 கோடி டாலரில் 62 சதவிகிதத்தை ஆசிய நாடுகளுக்கு ஒதுக்குமாறு, அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர், அமெரிக்க சட்ட சபையின் அனுமதியைக் கோருவார் என்று தெரிகிறது.

திராவிட நாட்டுப் போரணியின் தளபதிகள்

★

சென்னை மாவட்டம்

சென்னை, ஏப். 17—

சென்னை மாவட்டத் தி. மு. கழகக் கிளைச் செயற் குழுத் தேர்தல், இன்று காலை 10 மணிக்கு, சென்னை, இராயபுரம் 'அறிவகத்'தில், தேர்தல் ஆணையாளர் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்டவர்கள் மாவட்டச் செயற் குழு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

செயலாளர் : இளம்பரிதி —சென்னை-5.

துணைச் செயலாளர்: கோ செங்குட்டுவன்—சென்னை-1.

பொருளாளர் : ஆ. ச. சுந்தரமூர்த்தி—சென்னை-7.

பொதுக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகள் வருமாறு :—

1. இரா. நெடுஞ்செழியன், சென்னை—1.
2. என். வி. நடராசன், சென்னை-1.
3. தோழியர் அலமேலு - அப்பாதுரை, சென்னை-5.
4. இளம்பரிதி, சென்னை-5.
5. தோழியர் சத்தியவாணி - முத்து, சென்னை-1.
6. கே. எம் கண்ணபிரான், சென்னை-21.
7. ஆர். டி. அரசு, சென்னை-12.
8. கே. கோவிந்தசாமி, சென்னை-3.
9. சி. டி. டி. அரசு, சென்னை-3.
10. டி. வி. நாராயணசாமி, சென்னை-28.
11. காஞ்சி-மணிமொழியார். சென்னை-1.
12. மு. புரட்சிமணி, சென்னை-14.

★

திருச்சி மாவட்டம்

திருச்சி, ஏப். 17—

திருச்சி மாவட்ட தி. மு கழகக் கிளைச் செயற் குழுத் தேர்தல் இன்று காலை 10 மணிக்கு, திருச்சி கருணாநிதி பார்க் என். எஸ் பங்களாவில், தேர்தல் ஆணையாளர் தோழர் என். எஸ் இளங்கோ அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்டவர்கள் மாவட்டச் செயற் குழு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் :—

செயலாளர்: ஏ. பி. தர்மலிங்கம், அம்பில்

துணைச் செயலாளர் : ஜி பராங்குசம்—திருச்சி.

பொருளாளர் : எஸ் ஏ ஜி. ராபி —திருச்சி

பொதுக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகள் வருமாறு :—

1. ஏ. பி. தர்மலிங்கம், அம்பில்.
2. எம். எஸ். மணி, திருச்சி.
3. ஜி. பராங்குசம், திருச்சி.
4. டி. பி. மூர்த்தி, தவுட்டுப் பாளையம்.
5. எஸ். ஏ. ஜி. ராபி, திருச்சி.
6. எஸ். நெடுமாறன், திருச்சி.
7. முத்துக்கருப்பன், தாத்தய்யங்கார்பேட்டை.
8. டி. பி. அழகமுத்து, துறையூர்.
9. ஐ எம். ஷெரீப், திருச்சி.
10. டி. கே. திராவிடமணி, அரியலூர்.

★

சேலம் மாவட்டம்

சேலம், ஏப். 17—

சேலம் மாவட்ட தி. மு கழகக் கிளை செயற்குழுத் தேர்தல், இன்று காலை 10 மணிக்கு, சேலம் 'சாந்தி நிகேதன்', கோயம்புத்தூர் லாட்ஜில், தேர்தல் ஆணையாளர் தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்டவர்கள் மாவட்டச் செயற்குழு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

செயலாளர் : ஜி. பி. சோமசுந்தரம் —பேளுக்குறிச்சி.

துணைச் செயலாளர் : ப. இராமலிங்கம்—குள்ளம்பட்டி.

பொருளாளர் : பி. எம். குப்புசாமி —பெரியாம்பட்டி.

பொதுக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகள் வருமாறு :—

1. எம். பி. சுப்பிரமணிம், பேத்தநாய்க்கன்பாளையம்.
2. ஜி. பி. சோமசுந்தரம், பேளுக்குறிச்சி.
3. ப. இராமலிங்கம், குள்ளம் பட்டி.
4. ஈ. ஆர். கிருஷ்ணன், சேலம்.
5. பி. எம் குப்புசாமி, பெரியாம்பட்டி.
6. ப. கண்ணன், சலகண்டபுரம்.
7. இரா. தாண்டவன், எடப்பாடி.
8. சிற்றுளி அ. சுப்பிரமணியம், சேலம்.
9. கே. பெருமான், நாமக்கல்.
10. எச். எல். முருகேசன், அரூர்.

★

கோவை மாவட்டம்

ஈரோடு, ஏப். 17—

கோவை மாவட்ட தி. மு. கழகக் கிளைச் செயற்குழுத் தேர்தல் இன்று காலை 10 மணிக்கு, ஈரோடு கடை வீதியில் உள்ள தி. மு. கழக அலுவலகத்தில், தேர்தல் ஆணையாளர் தோழர் மதுரை எஸ். முத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்டவர்கள் மாவட்டச் செயற்குழு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

செயலாளர் : ஈ. வெ கி. சம்பத்—ஈரோடு

துணைச் செயலாளர் : வி. சண்முகநாதன்—மேட்டுப்பாளையம்

பொருளாளர் : பி. பாலசுந்தரம்—கோயம்புத்தூர்.

பொதுக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகள் வருமாறு :—

1. ஈ. வெ கி சம்பத், ஈரோடு.
2. கே ஏ மதியழகன், சென்னை.
3. எஸ் அப்பாவு, ஈரோடு.
4. கோவை செழியன், கோவை.
5. எஸ் ஏ இராசமாணிக்கம்,
6. ப நாராயணன், உடுமலைப் பேட்டை.
7. வி. சண்முகநாதன், மேட்டுப் பாளையம்.
8. பி. பொன்னுசாமி, பல்லடம்.
9. பி. என். இராமானுசம், பொள்ளாச்சி.
10. எல். எம். எஸ் நாதன், திருப்பூர்.

★

தென்னாற்காடு மாவட்டம்

நெல்லிக்குப்பம், ஏப். 17—

தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழகக் கிளை செயற்குழுத் தேர்தல் இன்று மாலை 3 மணிக்கு, நெல்லிக்குப்பம் அமராவதி பங்களாவில், தேர்தல் ஆணையாளர் தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்டவர்கள் மாவட்டச் செயற் குழு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் :—

செயலாளர் : இரா. சாம்பசிவம்—கடலூர் - என். டி.

துணைச் செயலாளர் : ஏ தங்கவேல் —திண்டிவனம்.

பொருளாளர் : ஜி. சொக்கலிங்கம் —வி. சாத்தமங்கலம்.

பொதுக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகள் வருமாறு :—

1. தில்லை - வில்லாளன், சிதம்பரம்.
2. இரா. சாம்பசிவம், கடலூர்-என். டி.
3. க. அறிவழகன், சிதம்பரம்.
4. பி. சொக்கலிங்கம், மேல வன்னியூர்.
5. சி. முனுசாமி, விருத்தாசலம்.
6. ஏ. தங்கவேல், திண்டிவனம்.
7. ச. சிவப்பிரகாசம், புதுச்சேரி
8. ந. நாச்சியப்பன், தேவபாண்டலம்.
9. இரா. தேவநாதன், நெல்லிக் குப்பம்.
10. டி. என். ஜி. அண்ணாமலை, சிறு மதுரை.

★

நாஞ்சில் மாவட்டம்

நாகர்கோவில், ஏப் 17—

நாஞ்சில் மாவட்ட தி. மு கழகக் கிளைச் செயற்குழுத் தேர்தல், இன்று காலை 10 மணிக்கு, நாகர்கோவில், வடசேரியிலுள்ள தி. மு. கழக அலுவலகத்தில், தேர்தல் ஆணையாளர் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்டவர்கள் மாவட்டச் செயற்குழு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் :—

செயலாளர் : வி. எம். ஜான்—நாகர்கோவில்.

துணைச் செயலாளர் : பி. எம். கண்ணு—குளச்சல்.

பொருளாளர் : கே. சுப்பிரமணியம் —நாகர்கோவில்

பொதுக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகள் வருமாறு :—

1. கி. மனோகரன், நாகர்கோவில்
2. சு. வன்னியபெருமாள், கண்ணன்புதூர்.
3. ஏ. குமாரவேல், நாகர் கோவில்.
4. எம். இராசகோபால், நாகர் கோவில்
5. பி. எம். கண்ணு, குளச்சல்.
6. எம். குமாரசாமி, இரவிபுதூர்
7. ஜே. டேவிட், மூணார்.
8. வை. சுப்பிரமணியம், நாகர் கோவில்.
9. பி. பத்மநாபன், ஈத்தாமொழி.
10. ந. நடராசன், நாகர்கோவில்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம் : அறிக்கை—11/55

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்ட அழைப்பு

★

அன்புடையீர் !

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம் 24—4—55 ஞாயிறு காலை 10 மணிக்கு, சென்னை, வண்ணாரப்பேட்டை, தியாகராயர் கல்லூரியில் நடைபெறும்.

அதுபோது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பொதுக் குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகின்றேன்.

பொருள் :—

1. பொதுச்செயலாளர் தேர்தல்
2. மாநில மாநாட்டு வரவேற்புக் குழு அமைத்தல்

அன்பன்,

"அறிவகம்" சென்னை 14—4—55

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★★★★★★★★★

முதல் முயற்சி!

மாநில மாநாட்டிற்காக தி. மு கழகம் 25 ஆயிரம் ரூபாய் பணம் திரட்டுவது என்ற பேரூர் தீர்மானத்தின் படி, சென்னையில், ஏப்ரல் 24-ந் தேதி மாலை, சென்னை, வண்ணாரப்பேட்டை, தியாகராயர் கல்லூரியில்,

புரட்சி நடிகர்,

M. G. இராமச்சந்திரன்
அவர்கள்

'ஆசை நினைவு'

எனும் நாடகத்தை நடத்தித் தர இசைந்துள்ளார்கள் என்பதைப் பெருமிதத்துடன் கூறிக்கொள்கிறோம். மாநில மாநாட்டுக்கு நிதி திரட்டும் முதல் முயற்சி இது ; முதல் முயற்சி, நமக்கெல்லாம் பெருமை தரத்தக்கதாக, வெற்றிகரமாக அமைதல் வேண்டும்.

முதல் முயற்சியின் வெற்றியின் துணை கொண்டுதான், தொடர்ந்து பல காரியங்கள் நடந்தேற வேண்டியிருக்கிறது.

சென்னைத் தோழர்களிடம், முதல் முயற்சி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

பெருமைப்படத்தக்க விதமான வெற்றியைத் தேடித் தரும் பெரும் பொறுப்பு சென்னைத் தோழர்களுக்கு !

சென்னைத் தோழர்கள், வெற்றியைத் தேடித் தருவார்கள் என்ற நம்பிக்கை நாடெங்கும் இருக்கிறது !

தோழர்களே ! இன்றிலிருந்தே பணியாற்ற வாருங்கள் !!

முதல் முயற்சி—ஏப்ரல் 24-ல் !

[குறிப்பு:—சென்னை 8—4—55 'நம் நாடு' இதழில் வெளியிடப்பெற்ற 'முதல் முயற்சி' அறிவிப்பில் கண்டுள்ளபடி தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் 'பகைவனின் காதலி' நாடகம் நடைபெறும், என்றிருப்பதற்குப் பதிலாக 'ஆசை நினைவு' நாடகம் என மாற்றிப் படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். தவறுக்கு வருந்துகிறோம்.—ஆ-ர்]

★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மரவள்ளி ஏற்றுமதி

பாகிஸ்தான், போர்ச்சுகல் ஆகியவற்றைத் தவிர, அனுமதிக்கப்பட்ட மற்ற நாடுகள் அனைத்திற்கும் மரவள்ளிக் கிழங்கும் மரவள்ளிக் கிழங்கு சீவல்களும், எவ்வித நிபந்தனையுமின்றி தாராளமாக அனுப்புவதற்கு அனுமதி வழங்கப்படுமாம். பகிரங்கப் பொது அனுமதி ஏற்பாட்டின்படி, பாகிஸ்தானுக்குத் தொடர்ந்து ஏற்றுமதி அனுமதிக்கப்படுமாம்.

சென்னை மாவட்ட கிளைக் கழகச் செயலாளர்கட்கு!

★

"24—4—55 ஞாயிறன்று சென்னை தியாகராயர் கல்லூரியில் நடைபெறவிருக்கும் பொதுக் குழுவிற்கும், அன்று மாலை நடைபெறவிருக்கும் நாடகத்திற்கும் பணியாற்றுவதற்கென தங்கள் வட்டத்தின் சார்பில் பிரதிநிதி ஒருவரை வெள்ளிக் கிழமை மாலை 6-மணிக்கு 'அறிவக'த்திற்கு அனுப்பிவைத்து, தோழர் கோ. செங்குட்டுவன் அவர்களிடம் பதிவு செய்து கொள்ள ஆவன செய்ய வேண்டுகிறோம்,"

என்று சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

நந்திகொண்டா திட்டம்

'நாகார்ஜுன சாகர்' என மாறுகிறது

ஆந்திரா—ஐதராபாத் மாநிலங்களின் கூட்டு முயற்சியில் ரூ 122 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் நந்திகொண்டா அணைக்கட்டு, இனி, 'நாகார்ஜுன சாகர்' என்று அழைக்கப்படுமாம் !

ஆந்திர சர்க்காரின் இந்தப் பெயர் மாற்றத்திற்கு, ஐதராபாத் சர்க்காரும் ஒப்புதலளித்து விட்டனராம்.

ஆந்திராவில் ஆறும் நூற்றாண்டில் வாழ்ந்த நாகார்ஜுனா என்ற மூதறிஞரின் நினைவாகவே திட்டம், அந்தப் பெயர் பெறுகிறது.

அவர், அங்கு ஒரு பெரும் புத்த பல்கலைக் கழகத்தைத் துவக்கியிருந்தாராம்.

அந்தப் பல்கலைக் கழகமும், இதர புத்தமத நினைவுச் சின்னங்களும் பூமிக்கடியில் புதைந்து கிடப்பதாயும், அவற்றைத் தோண்டி ஆராய்ச்சி செய்ய இந்திய பூகோள இலாகா முடிவு செய்திருக்கிறது என்று கூறப்படுகிறது.

அங்கு கிடைக்கும் அரிய பொருள்களை, அணைக்கட்டுக்கு அருகில் ஒரு பொருட்காட்சிசாலை கட்டுவித்து அதில் சேகரித்து வைக்கவும் ஐந்தாண்டு காலத்திட்டமொன்றும் உள்ளதாம்.

'இப்போதுகூட 'நாகார்ஜுன கொண்டா' என்றுதான் அந்த அணைக்கட்டுப் பகுதி அழைக்கப்படுகிறதாம்.

ரஷ்ய சிறைகளில்

நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனராம்

"சோவியத் ரஷ்யாவில் உள்ள சிறைகளில் கடந்த 1953—54-ம் ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான கைதிகள் கொல்லப்பட்டனர்" என்று, 10 ஆண்டுகளாக ரஷ்யாவில் கைதிகளாயிருந்துவிட்டுத் திரும்பியுள்ள 88 ஜப்பானியர்கள் கூறியிருக்கின்றனராம்.

கடந்த ஆண்டு மே 15 முதல் ஜூன் 27-க்குள், 'காரகண்டா' எனும் சிறையில் 'வேலை நிறுத்தம்' செய்த கைதிகளில் 200 பேர் கொல்லப்பட்டனர் எனவும், 190 பேர் படுகாயப்பட்டனர் எனவும் தெரியவருகிறது.

டாங்கிகள், மெஷின் துப்பாக்கிகள் கொண்டு சோவியத் அதிகாரிகள் சிறைக்குள் எழுந்த அந்தக் கலகத்தை அடக்கினராம்.

திருமணமான கைதிகள், தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வாழ அனுமதிக்கப்பட வேண்டும் என்று கோரியதை ஒட்டி சிறைக்குள் அந்த சம்பவங்கள் நடந்தனவாம்.

கழகக் கூட்டங்கள்

★

கோவில்கண்ணுப்பூர்
கீழக்கண்ணுப்பூரில்
23—4—55 மாலை 6 மணிக்கு
தலைவர் : இரா. பன்னீர்செல்வம்
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
த. கனகசபை

★

வலங்கைமான்
கடைத்தெரு அருகில்
23—4—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
என். வி. நடராசன்
ஏ. வி. இராமசாமி
வலங்கை அரங்கண்ணல்

★

வெங்கிடங்கால்
23—4—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
என். எஸ். இளங்கோ
அடைக்கலம்
கிட்டப்பா
ஜம்பு
சௌந்தர்

கே. எஸ். பாண்டியன் படிப்பக ஆண்டு விழா

★

23—4—55 மாலை 6 மணிக்கு, சென்னை, வண்ணை கே எஸ். பாண்டியன் படிப்பக மூன்றும் ஆண்டு விழா, வண்ணை பாண்டியன் திடலில் (கல்லறை மைதானம்) தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், பி. எம். இராமையா ஆகியோர் பேசுவர்.

சென்னை 46-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர்கட்கு

23—4—55 மாலை 7 மணிக்கு, சென்னை 46-வது வட்ட தி. மு கழக உறுப்பினர் கூட்டம், கழக பணி மனையில் (142, ஆள்வார் பேட்டை தெரு) நடைபெறும்.

பாராட்டுத் தேனீர் விருந்து

23—4—55 மாலை 3 மணிக்கு, வெங்கிடங்காலில், தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற தோழர் என். எஸ். இளங்கோ, பொதுக் குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற தோழர்கள் வ. சந்தானம், என். கிட்டப்பா, அடைக்கலம் ஆகியோருக்கு பாராட்டு தேனீர் விருந்து அளிக்கப்படும்.

அறிவிப்பு

“ தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அறிக்கைப்படி 27—3—55 அன்று தேர்தல் நடத்திய சேலம் மாவட்ட கிளைக் கழகங்கள், தேர்தல் விவரங்களுடன் செயற் குழு விவரம், முகவரி இவற்றோடு சேலம் மாவட்ட தி. மு. கழகத்திற்கு இன்னும் அனுப்பி வைக்காதவர்கள் உடனே மேற்கண்ட விவரங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு கோரப்படுகிறது,” என, தோழர் ப. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

முகவரி : ப. இராமலிங்கம், துணைச் செயலாளர், சேலம் மாவட்ட தி. மு. க, குள்ளம்பட்டி அஞ்சல், எடப்பாடி வழி, சேலம் மாவட்டம்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை திருநாள்

22—4—55 மாலை 6½ மணிக்கு, சென்னை, புரசை பெரிய சாலை, அன்னதான சமாச மண்டபத்தில் சென்னை திருவள்ளுவர் கழக சார்பில் நடைபெறும். திரு. அ. கி. பரந்தாமனார் பேசுவார்.

“பொதுக்குழு முடிவுப்படி கழகப் பணியாற்றுவேன்”

ஆசிரியர் ‘நம் நாடு’,
அன்புடையீர்,

“ஜனநாயக முறையின் புனிதத்தன்மைக்கேற்பவே, திராவிட முன்னேற்றக் கழகம் பணியாற்றி வருகிறது.

“கழகத்தின் திட்டங்கள் திட்டும் பொறுப்பு பொதுக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது; பொதுக்குழு தீட்டித் தரும் முறையில் பணியாற்றும் பொறுப்பு பொதுச்செயலாளருடையது.

“ ஆகவே, ‘பொதுச்செயலாளர் பதவியில் குறிப்பிட்ட ஒருவர் இருந்தால் மட்டுமே கழக வளர்ச்சி ஏற்படும் என்று எண்ணுவது சரியல்ல,’ என்பதை அண்ணாவிடம் பேசி அறிந்து கொண்ட நான், ‘பொதுச்செயலாளர் பதவிக்கு அண்ணா தவிர வேறு யாராவது நிறுத்தப்படுவதானால், உண்ணாவிரதம் இருந்து அந்த முயற்சியைக் குலைப்பது,’ என்று கொண்டிருந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டுவிட்டேன்.

“கழகத்தின் கண்ணியம், கட்டுப்பாடு காப்பாற்றப்படுவதற்கான வகையிலே நடந்து கொள்வேன் என்றும், பொதுக்குழு காட்டும் முடிவின்படி நடந்துகொண்டு, கழகப் பணியாற்றுவேன் என்பதையும் கழகத் தோழர்களுக்குக் கூறிக்கொள்கிறேன்.

“என்போலவே எண்ணம் கொண்டுள்ள தோழர்கள் அனைவருக்கும், இந்த விளக்கம் பயன் அளிக்கும் என்று நம்புகிறேன்.”

வளர்க ஜனநாயகம்!

வாழ்க தி. மு. கழகம்!

கா. பி. முகமதலி,
மார்ட்டின்ராஜ் காலனி,
பட்டுக்கோட்டை

தேவை ஆயிரக்கணக்கில் —

சிறு சிறு துளியெனச் சேர்ப்போம், தோழர்காள்!

*

நாட்டின் தலைநகர் சென்னையில்-

துவங்குகிறது துளிகளைச் சேர்க்கும் சீரிய முயற்சி

*

24—4—1955 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு
முதல் முயற்சியின் முரசு ஒலிக்கிறது!
சென்னை, வண்ணையம்பதி,

தியாகராயர் கல்லூரி கலா மண்டபத்தில்

M. G. R. நாடக மன்றத்தினரின்

‘ஆசை நினைவு’

M. G. இராமச்சந்திரன், M. G. சக்கரபாணி, G. சகுந்தலா
முதலியோர் பங்கேற்கின்றனர்

கட்டணம் : ரூ. 3, 2, 1, அணா 12

தோழர்கள் கொடுக்கும் சிறு சிறு தொகைதான்—எதிர்காலத்தை எழிலுள்ளதாக்கத் திட்டங்கள் தீட்டிக் கொடுக்கும்

மாநில மாநாடு

—தி. மு. கழக நலைமை நிலையம்

பாண்டுங் மாநாட்டில்.....!

சீனாவை எகிப்து அங்கீகரிக்கும்

பாண்டுங் மாநாட்டில் மக்கள் சீனப் பிரதமர் சூ-யென்-லாயும், எகிப்துப் பிரதமர் கர்னல் நாசரும் சந்தித்துப் பேசியதின் விளைவாக மக்கள் சீனாவை எகிப்து அங்கீகரிக்கும் என்று தெரியவருகிறது.

* * *

பாலஸ்தீன் பிரச்சினை : நேருவின் யோசனை

மாநாட்டு அரசியல் குழுக் கூட்டத்தில் பேசுகையில் இந்தியப் பிரதமர் நேரு, பாலஸ்தீனப் பிரச்சினையை சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலமாகத்தான் தீர்த்து வைக்க முடியும் என்று கூறியிருக்கிறார். அவரது யோசனைக்கிணங்க பாலஸ்தீன, அரபு அகதிகள் பற்றிய தீர்மானம் ஒன்றைத் தயாரிக்க 8 நாடுகளின் பிரதிநிதிகள் கொண்ட துணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

* * *

திடீர் வருகை

இம்மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கையில், ஜெருசலத்தின் முன்னாள் பெரிய முப்தியான ஹாஜ் அமீன் அலி ஹுசாமினி திடீரென வருகை தந்திருக்கிறார். பார்வையாளராக வந்திருக்கும் அவர், மாநாட்டில், பாலஸ்தீனப் பிரச்சினையை எழுப்புவார் என்றும் கூறப்படுகிறது.

* * *

‘மனித உரிமைகள்’

மனித உரிமைக் கொள்கைகள் சம்பந்தமாக ஏகமனதான தீர்மானம் ஒன்றை மாநாட்டு அரசியல் குழு நிர்ணயித்துள்ளதென்றும், இத்தீர்மானம், மாநாட்டின் இறுதி அறிக்கையில் இடம் பெறும் என்றும் கூறப்படுகிறது.

இந்த மாநாட்டின் அரசியல் குழு, சர்வதேச நெருக்கடி பற்றியும், அணுசக்திக் காலத்தில் சமாதானமாக ஒத்துவாழ்வதின் சாத்தியக் கூறுபாடுகள் பற்றியும் ஆலோசனைகள் நடத்தும் என்று தெரிகிறது.

* * *

மேலும் என்ன?

வட ஆப்பிரிக்காவிலிருக்கும் பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழுள்ள மொராக்கோ, டுனிசியா, அல்ஜீரியா ஆகிய நாடுகளின் பிரச்சினைகள் பற்றியும் கவனிக்கப்படும் என்றும், மாநாட்டின் பொருளாதாரக் குழு, வர்த்தகம் பற்றியும் அணுசக்தியை ஆக்கவேலைக்குப் பயன்படுத்துவது பற்றியும் விவாதிக்குமென்றும் கூறப்படுகிறது.

* * *

கோரிக்கையும்—எதிர்ப்பும்

‘சீனா மீது ஐ. நா. விதித்த வர்த்தகத் தடையை நீக்க வேண்டும்’ என்று பாண்டுங் மாநாட்டில், பொருளாதாரக் குழுக் கூட்டத்தில், இந்தோனேஷியா கோரியிருப்பதாகத் தெரிகிறது. இந்தக் கோரிக்கையை பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, துருக்கி ஆகிய நாடுகள் பலமாக எதிர்த்துள்ளன என்று கூறப்படுகிறது.

நிலச் சரிவுக்கு 500 பேர் பலி?

மத்திய ஜாவாவில் நிலச் சரிவு ஏற்பட்டு, சுமார் 500 கிராமவாசிகள் புதையுண்டதாகவும், அவர்களில் இருவர் மட்டுமே இதுவரை மீட்கப்பட்டுள்ளனர் என்றும் செய்தி ஒன்று அறிவிக்கிறது.

ஒரே இடத்தில் 15 அடி உயரத்திற்குக் குன்றுபோல் 46 வீடுகள் இடிந்து கிடந்த இடத்திலிருந்து அவ்விருவரும் மீட்கப்பட்டிருக்கின்றனராம். 4 பேருடைய இறந்த பிரேதங்கள் தோண்டி யெடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது

சென்ற பிப்ரவரி திங்களிலேயே. ஏற்பட்ட புயல் ஒன்றை ஒட்டி, விரைவில் நிலச் சரிவு ஏற்படக் கூடிய அபாயமொன்று நிகழ இருக்கிறது என்று எச்சரிக்கப்பட்டிருந்தும்கூட கிராமவாசிகள் அப்பிரதேசத்திலிருந்து வெளியேற மறுத்து விட்டிருக்கின்றனர்.

ஏட்டுக் கல்வி பெறும்...

(1-ம பக்கத்தின் தொடர்ச்சி)

கூறுவது தவறு—இதை நான் பணிவுடன் கூறவிரும்புகிறேன்.

“ தாழ்த்தப்பட்ட மக்களுடையவும், இதர பின் தங்கிய மக்களுடையவும் குரலாக நான் மக்கள் சபையில் விளங்கியிருக்கிறேன்; எனது குரலுக்குக் கிடைக்க வேண்டிய மதிப்பும் பலனும் கிடைத்திருப்பதாகவே நான் நம்புகிறேன்,”

என்றும், அவர், அந்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

எஸ். சி. சி. அந்தோணி மாஸ்கோ செல்கிறார்

சென்னை, ஏப். 21—

சோவியத் ரஷ்ய அரசாங்க அழைப்பின் பேரில், மே தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக சென்னை தொழிலாளர் இயக்கத் தலைவர் எஸ். சி. சி. அந்தோணி பிள்ளை மாஸ்கோ செல்கிறார்.

ரூ. 3 லட்சம் பெறுமான கள்ளத் தங்கம்!

பம்பாயிலுள்ள மத்திய சுங்க இலாகாவைச் சேர்ந்த துப்பறியும் அதிகாரிகள், சுமார் மூன்று லட்சம் மதிப்புள்ள 3,150 தோலா கள்ளத் தங்கத்தை கைப்பற்றியுள்ளனராம்.

மந்திரிகளே இல்லாத மக்கள் சபைக் கூட்டம்!

சபைக்குத் தலைமை தாங்கிய அனந்தசயனம் அய்யங்கார் கண்டனம்

புதுடில்லி, ஏப். 19—

“நாம் ஏன் இங்கு இந்த நிதி மசோதா மீது விவாதித்துக் கொண்டிருக்கிறோம்? உறுப்பினர்கள் மட்டும் விவாதிக்கவா? அல்லது, அரசாங்கம், விவாதத்திற்குப் பதிலளிக்க வேண்டுமென்பதற்காகவா?

“ஒரு நிதி மசோதாவின் பொது விவாதத்தின்போதுகூட அமைச்சர்கள் எவரும் சபையில் இல்லாதது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

“ அமைச்சர்கள், தாங்களாகவோ, அல்லது தங்களின் துணை அமைச்சர்களையோ இன்னும் ஒருமணி நேரத்திற்குள் இங்கு அனுப்பி, இங்கு நடைபெறுவனவற்றைக் குறித்து, எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகளுக்குப் பதில் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன்,”

—என்று, மக்கள் சபையின் துணைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார், நிதிமசோதா விவாதத்தின்போது சபையில் அமைச்சர் எவருமில்லாதது கண்டு கண்டனம் தெரிவிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பண்டிட் தாகூர் தாஸ் பர்காவா என்ற உறுப்பினர் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“ சபை நடவடிக்கைகளுக்கு மந்திரிகள் தரும் கவனம் அவ்வளவுதான்; இங்கு பேசப்படுபவை எல்லாம் செவிடர் காதில் ஊதப்படும் சங்கு போலத்தானிருக்கிறது; இங்கு பேசப்படுபவை சரியாகக் கவனிக்கப்படுவதில்லை; அதன் விளைவாக ‘கோரம்’கூட சில நேரங்களில் இல்லாமல் போய் விடுகிறது; அமைச்சர்கள் இங்கு இல்லாமையினால், சபை நடவடிக்கைகள் வெறும் கேலிக் கூத்தாகி விடுகின்றன,” என்றார்.

துணைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் மீண்டும் கூறினார் :—

“ இங்கு பேசப்படுபவை, செவிடர் காதில் விழுவதாக பர்காவா கூறினார்; ஆனால், அந்த ‘செவிட்டுக் காது’கள் கூட, இங்கு இல்லையே,” என்று குறிப்பிட்டார்.

அப்போது பல காங்கிரஸ், எதிர்க் கட்சி உறுப்பினர்கள், மந்திரிகள் சபையில் இல்லாதது தங்களுக்கு விவாதத்தில் கலந்து கொள்ள முடியாமற்செய்துவிடுவதாகப் புகார் கூறினர்.

சபையில் இருந்த ஒரே மந்திரி எம். சி. ஷா எழுந்து, தான் இங்கு இருப்பதாகக் கூறினார்.

உடனே துணைத் தலைவர், ‘இந்த அமைச்சரே மற்ற எல்லா அமைச்சர்களின் பொறுப்பையும் ஏற்றுக் கொள்வார் எனத் தாம் நினைக்கவில்லை,” என்று கூறினார்.

பின்பு, ஒரு மணி நேரத்திற்குள், மூன்று மந்திரிகளும், பல துணை மந்திரிகளும் சபைக்கு வந்தனராம்!

கிரீசில் நில நடுக்கம்

ஏதென்ஸ் ஏப். 20—

கிரீசின் தலைநகரான ஏதென்சிற்கு வடக்கே சுமார் 150 கல் தொலைவிலிருக்கும் வராஸ் பிரதேசங்களில் நேற்றிரவு பலத்த பூகம்பம் ஏற்பட்டு அதன் விளைவாக சுமார் 3,500 பேர் வீடிழந்து பரிதவிப்பதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்றின்மூலம் தெரிய வருகிறது.

அங்கே, ஒரே நாளில் மட்டும் 24 முறைகள் நில நடுக்கம் ஏற்பட்டதாம். அப்பிரதேசங்களில் வாழும் மக்களனைவரும் மிகுந்த பீதி கொண்டுள்ளார்களாம்.

கிடைக்கப்பெற்றுள்ள தகவல் ஒன்றின்படி, இப்பூகம்பத்தின் விளைவாக சுமார் 50 பேர் காயமுற்றதாகவும், ஒருவர் கொல்லப்பட்டதாகவும் தெரிய வருகிறது

கண்ணிழந்தோர் தொகை 20 லட்சமாம்!

இந்தியா முழுமையிலுமாக 20 - லட்சம் கண்ணிழந்தோர் இருப்பதாக மதிப்பெடுக்கப்பட்டுள்ளதாக டெல்லி மேல் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ , அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம். ஏ.